# ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

4 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

### கொள்கை வகுப்பறைகள்

திராவிட முன்னேற்றக் கழகம் என்பதே ஒரு அறிவு இயக்கம். கழகத்தில் பயணிக்கிற ஒவ்வொரு நாளும் அறிவுத் திருநாள்தான். குக்கிராமங்களில் கூட படிப்பகம் நடத்திய இயக்கம், நம் திராவிட முன்னேற்றக் கழகம். சலூன் கடை, டீ கடை, சைக்கிள் ஸ்டாண்ட் என்று சாமானிய மக்களையும் அரசியல் பேச வைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். நம் ஒவ்வொரு தலைவரும் நூற்றுக் கணக்கான பத்திரிகைகளைத் தலைமையேற்று நடத்தினார்கள். கழக முன்னோடிகள் எல்லோரும் புத்தகங்கள் எழுதினார்கள். நம் கழக மேடைகள் ஒவ்வொன்றும், கொள்கை வகுப்பறைகள் என்று சொன்னால் அது மிகையாகாது. கழகத்தின் முதல் தலைமை அலுவலகத்துக்கு அண்ணா வைத்த பெயர் அறிவகம். அதன் பிறகு நம் கலைஞர் நம் கட்சியின் தலைமையகத்தைக் கட்டி, அதற்கு அவர் வைத்த பெயர் அண்ணா அறிவாலயம். இப்படி, அறிவுக்கு முக்கியத்துவம் தருவதால்தான், இன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டி இயக்கமாக நடைபோட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த உரிமையில்தான் நாம் அறிவுத் திருவிழாவை நடத்துகிறோம். வெறுப்படைந்த அனைவருக்கும் சவால் விடுகிறோம். நீங்களும் நடத்திக் காட்டுங்கள் பார்ப்போம். ஆகவே, அடிமைகளையும், பாசிஸ்ட்டுகளையும், கொள்கையற்ற வெற்று அட்டைகளையும் கண்டு நாம் அச்சப்பட தேவையில்லை. இந்த அறிவுத் திருவிழா, கழக வரலாற்றில் என்றைக்கும் நிச்சயம் நீடித்து, நிலைக்கும்.

இன்றைக்கு அறிவுத் திருவிழா நிறைவுபெற்று, நாம் எல்லாம் வள்ளுவர் கோட்டத்தில் இருந்து புறப்படுகிறோம். இளைஞர் அணி அமைப்பாளர்கள், சகோதரர்களை எல்லாம் பார்க்கும்போது, ஏதோ காலேஜ் பேர்வெல் டே முடித்து விட்டு, நண்பர்களை விட்டு கிளம்புகிற மாதிரி உங்கள் முகத்தில் ஒரு சோகம் தெரிகிறது.

### கலைஞரின் பேரன் நான்

நாம் இங்கிருந்து புறப்பட்டு நேராக வீட்டுக்குப் போகப் போவதில்லை. அடுத்து நமக்கு மிகப்பெரிய களம் காத்துக் கொண்டு இருக்கிறது. 2026 சட்ட மன்றத் தேர்தலைப் பார்க்க போகிறோம்.

இந்த அறிவுத் திருவிழாவில் நாம் பேசிய விஷயங்கள், பரிமாறிக் கொண்ட கருத்துகளை எல்லாம் பட்டிதொட்டி எங்கும் கொண்டு போய் சேர்க்க வேண்டும். அதற்காகத்தான் இந்த அறிவுத் திருவிழா நடத்தப்பட்டது. தெருமுனைக் கூட்டங்கள், சின்ன சின்ன வீடியோஸ், ரீல்ஸ், சமூக வலைதளம் என்றும் இந்தக் கருத்துக்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், நாடு இன்றைக்கு மிக மிக முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறது. இவ்வளவு நாட்களாக எதிர்க் கட்சிகளை மிரட்ட, ஈ.டி, ஐ.டி, சி.பி.எஸ் போன்ற அமைப்புகளை வைத்து பயமுறுத்தினார்கள். சில நாட்களுக்கு முன்பு என்னையும் ஈ.டி-ஐ வைத்து பயமுறுத்தினார்கள். இதற்கெல்லாம் பயப்படுகிற ஆளா நான்? முத்தமிழறிஞர் கலைஞரின் பேரன், கழகத்தலைவர் அவர்களின் வளர்ப்பு நான்.

எதிர்கட்சிகளை முடக்க, தேர்தல் ஆணையமே அந்த வேலையில் இறங்கியுள்ளது. எஸ்.ஐ.ஆர். என்ற திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். தேர்தலை திருட்டுத்தனமாக நடத்த இன்றைக்கு ஒன்றிய அரசு இறங்கியுள்ளது. நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டிய காலகட்டம் இது.

முதலில் உங்கள் ஒவ்வொருவர் வாக்கையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும். உங்களைச் சுற்றி இருக்கிற தகுதியான ஒரு வாக்காளர்கூட, பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விடக் கூடாது. இதில் நாம் கண்ணும், கருத்துமாக நாம் ஈடுபட வேண்டும். அதேமாதிரி, போலி வாக்காளர்கள் சேர்ப்பதையும் நாம் எந்த காலத்திலும் அனுமதிக்கக் கூடாது. நம் தலைவர் அவர்கள் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிபெற்று காட்ட வேண்டும் என்று அடுத்த 4 மாதங்கள் களத்தில் பணியாற்ற வேண்டும்.

1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், கழகம் முதன்முறையாக ஆட்சியைப் பிடிப்பதற்கு, அப்போது இருந்த உடன்பிறப்புகள், எப்படி வேலை பார்த்தார்களோ, அதைவிட அதிகமாக நாம் வேலை பார்க்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். அடுத்த 4 மாதத்துக்கு வேறு எந்த பணியும் நம் கண்களுக்குத் தெரியக்கூடாது. 2026-இல் நாம் வெற்றி பெற்றால், அது கழகத்தின் வெற்றி மட்டும் கிடையாது, அது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வெற்றி என்பதை மக்களுக்கு நாம் புரிய வைக்க வேண்டும்.

### கழகத் தலைவருக்கு நன்றி

7-வது முறையாக கழக ஆட்சி அமைக்க, தொடர்ந்து 2-வது முறையாக, நம் தலைவர் அவர்கள், முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் களத்தில் இறங்கி செய்துகாட்ட வேண்டும். அதற்கு இந்த அறிவுத் திருவிழாவும், முற்போக்கு புத்தகக் காட்சியும் நிச்சயம் அடித்தளமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த நேரத்தில், அறிவுத் திருவிழாவை நடத்த அனுமதி வழங்கி, வழிகாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தலைமைக் கழகத்துக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகக் காட்சியில் பங்கேற்ற அத்தனை பதிப்பகங்களுக்கும், இரவு பகலாக உழைத்த அதன் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகக்காட்சியில் உரைவீச்சை வழங்கிய திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் அருள்மொழி, நாகை சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் ஆளூர் ஷா நவாஸ், திரைப்பட பாடலாசிரியர் சகோதரர் கவிஞர் யுகபாரதி, இயக்குநர் சகோதரர் கரு.பழனியப்பன், எழுத்தாளர்கள் ஆதவன் தீட்சண்யா, கவிஞர் சுகிர்தராணி, பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியை நடத்திய தாமோதரன் உள்ளிட்டோருக்கும், புதுகை பூபாளம், கோவன் கலைக்குழு, பாப்பம்பட்டி ஜமா, மாற்று ஊடக மையம் கலைக்குழு, நிகர் கலைக்கூடம் உள்ளிட்டவற்றின் கலைஞர்களுக்கும், அனைவரின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக ஒருங்கிணைக்க துணை நின்ற மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் அணியின் சென்னை மண்டல பொறுப்பாளர், மாநில துணைச் செயலாளர் சகோதரர் எஸ்.ஜோயல் அவர்களுக்கும், அவருடன் துணை நின்ற அத்தனை மாநில துணைச் செயலாளர்களுக்கும், சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் பிரகாஷ் உட்பட அத்தனை மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அன்பகம் பணியாளர்கள், பாதுகாப்பு வழங்கிய காவல்துறை நண்பர்கள், வள்ளுவர் கோட்டம் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், என அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவுத்திருவிழாவில் உங்களைப் போல நானும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக தி.மு.கழகத்தின் 75 ஆண்டுகால வரலாற்றை உரையாடல் வடிவில் பறை இசையுடன் விவரித்த `மாற்று ஊடக மையம்’ கலைக்குழுவின் நிகழ்ச்சி பெரும் எழுச்சியாக நடைபெற்றது. மேலும், பிற்போக்குத்தனங்களை பின்னுக்குத் தள்ளி, அவற்றுக்கு மாற்றாக அறிவை, திருவிழாவாக கொண்டாட வேண்டியதன் அவசியத்தை வழக்கறிஞர் அருள்மொழி எடுத்துக் கூறி உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாநில திட்டக் குழு செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், திராவிடர் கழக பிரச்சார செயலாளர் அருள்மொழி, சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கனிமொழி என்.வி.என்.சோமு. சல்மா, மருத்துவர் கலாநிதி வீராசாமி, கே.இ.பிரகாஷ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, தாட்கோவின் தலைவர் இளையராஜா, அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மருத்துவர் எழிலன், தமிழரசி, முத்துராஜா, ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர்ராஜா, கழக அணிகளின் மாநிலச் செயலாளர்கள் எஸ்.கே.பி.கருணா, அக்ரி கணேசன், பேராசிரியர் தீபக், மருத்துவர் சுபேர் கான், கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், கோவி லெனின், பத்திரிக்கையாளர்கள் ஜென் ராம், ஜீவ சகாப்தன், தர்மசெல்வன், பகுதி கழகச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, வினோத் வேலாயுதம், புழல் நாராயணன், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் பிரின்ஸ் என்னாரெஸ் பெரியார், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆண்டாள் பிரியதர்ஷினி, பத்மபிரியா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஹபி சுல்லா, இறையன்பன் குத்தூசு, நுங்கை வி.எஸ்.ராஜ், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பிரகாஷ், ராஜா அன்பழகன், ஆர்.டி. மதன்குமார், வானவில் விஜய், லோகேஷ், கிரண், சுரேஷ்குமார், கோல்டு பிரகாஷ், யுவராஜ், அரசு ஆர்ட்ஸ் கோபி, போஸ் பழனியப்பன், முத்து, ராஜா, கார்த்திக், ஆனந்த், கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் வி.பி.மணி, தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கவிஞர் மனுஷ்யபுத்திரன், திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்க நிர்வாகி பேராசிரியர் தேன்மொழி, ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.






திமுக75 அறிவுத்திருவிழா, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வந்த நிலையில், அதன் நிறைவு விழா நேற்று முன்தினம் (16.11.2005) நடைபெற்றது. தி.மு.கழகத்தின் 75 ஆண்டுகால வரலாற்றை உரையாடல் வடிவில் பறையிசையுடன் விவரித்த `மாற்று ஊடக மையம்’ கலைக்குழுவின் நிகழ்ச்சியும்,அறிவை திருவிழாவை கொண்டாட வேண்டியதன் அவசியத்தை விவரிக்கும் வகையில் திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்களின் உரைவீச்சும் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் குன்னூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆறு பூத்துகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியினை (SIR) ஆய்வு மேற்கொண்டார். உடன் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திருவிடை மருதூர் தொகுதியில் வாக்குச்சாவடி முகவர்கள் – டிஜிட்டல் முகவர்கள் - இளைஞர் அணி பாக முகவர்கள் பயிற்சி கூட்டம்!

### கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர், நவ. 18 - தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி பாக முகவர்கள் பயிற்சி கூட்டம் சாரதா மஹாலில் நடைபெற்றது.

இப்பயிற்சி கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, திருவிடைமருதூர் தொகுதி பார்வையாளர் குறிஞ்சிவாணன், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் கோ.க.அண்ணாதுரை, கூகூர் அம்பிகாபதி, உள்ளூர் கணேசன், உதயா ரவிச்சந்திரன், மிசா.மனோகரன் மற்றும் ஜெ.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார். உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடக்க உரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளராக கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,

பீகாரில் இந்தியா கூட்டணி பின்னடைவை சந்தித்த நேரத்தில் தமிழகத்தில் முதன்முறையாக திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகளுக்கான சிறப்பு பயிற்சி கூட்டம் என்பது தற்போது மிக அவசியம். அதனை எடுத்துக்காட்டாக இந்த தொகுதியில் உயர்கல்வித்துறை அமைச்சர் நடத்துவது சிறப்பான ஒன்றாகும். வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் தமிழகத்துக்கு மட்டுமல்ல இந்திய அரசியல் அமைப்புக்கு முக்கியமான தேர்தலாகும். தமிழக முதல்வரின் செயல்பாடுகள் இந்திய அளவில் உச்சத்தை எட்டியுள்ளது. அது எங்களுக்கு மட்டும் தான் தெரியும். முதல்வரின் செயல்பாடுகள், திட்டங்கள் தான் அனைத்து மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன. குறிப்பாக ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள சிறப்பு வாக்காளர் திருத்த எஸ்.ஐ.ஆர் திட்டத்தை எதிர்க்க ஓராண்டுக்கு மேலாக நமது இயக்கத்தின் சார்பில் ஏராளமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னால் நம்மை எதிர்த்தவர்கள் அவ்வளவு மோசமானவர்கள் இல்லை. எஸ்.ஐ.ஆர் திட்டம் மூலம் தேர்தல் ஆணையம் திருடனாக மாறியுள்ளது. திருடர்களிடமிருந்து காப்பாற்றுவது நமது பணி. அதனை தமிழக முதல்வர் சிறப்பாக செய்து வருகிறார். எஸ்.ஐ.ஆர் திட்டத்தை அமல்படுத்தியதன் மூலம் தேர்தல் ஆணையம் திருடர் என்றால் அமித்ஷாவும் மோடியும் பெரும் திருடர்கள். தற்போது இளைஞர்கள் மாற்றத்தை விரும்புவதாக கூறி பல கட்சிக்கு மாறி வருகிறார்கள். குறிப்பாக புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்சிக்கு செல்கிறார்கள். மாற்றத்தை கொண்டு வந்தது 75 ஆண்டுகால தி.மு.க. ஆட்சி தான். பெரியார், அண்ணா, கலைஞர் வழிவந்த தளபதி ஸ்டாலின் ஆட்சி தான். 1946ல் அம்பேத்கர், நேரு என அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் என்பது வேறு. அதனை மாற்ற வேண்டும், அடித்தட்டு மக்களுக்கும் வாக்குரிமை வழங்க வேண்டும் என கூறியவர் பெரியார். நேரு அம்பேத்கர் இடம்பெற்ற ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் அரசியல் அமைப்பை கட்டமைத்து சமூக நீதி நிலை நாட்டப்பட்டது. அரசியலமைப்பு சட்டத்திற்கு நேரு காலத்திலோ, இந்திராகாந்தி காலத்திலோ, பாஜகவில் இருந்த வாஜ்பாய் காலத்திலோ இல்லை, அயோத்தியில் மசூதியை இடித்து விட்டு ராமர் கோயில் கட்டக்கூடாது என கையெழுத்து வாங்கி பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்து பாஜகவை கட்டுக்குள் வைத்த இயக்கம் திமுக. 15 ஆண்டு கால சிறைவாசம் பெற்ற பிறகும் இந்த ராசாவுக்கான மரியாதை மேலோங்கி இருப்பதற்கு காரணம் திராவிட இயக்கத்தில் பயணித்ததால் தான். பெரியார் காலத்தில் ஆர்.எஸ்.எஸ் போன்ற மதவாத சக்திகள் இல்லை. தற்போது இந்தியா முழுவதும் மதவாதம் மேலோங்கி வருகிறது. கொலை, கற்பழிப்பு, கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டவர்களை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்ற அரசு குஜராத்தில் மோடி தலைமையிலான அரசு. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் இந்தியாவையும், இந்திய அரசியலமைப்பையும் காப்பாற்றும் தேர்தல். இதனை காப்பாற்றுவது இயக்கத்தில் பயணிக்கும் வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரின் கடமை. 1952ல் ராஜாஜி குல கல்வியை எதிர்த்த இயக்கம் திமுக. அதானியை பிராடு என்று அறிக்கைகள் கூறுகின்றன. அப்பேர்ப்பட்ட அதானி என்ற ப்ராடக்ட் வைத்துக்கொண்டு நாடு நாடாக சுற்றும் அமித்ஷா மற்றும் மோடி இதற்கு அமைதியாக இருந்தால் அவர்களையும் பிராடு என்று கூற தான் வருகிறது. நீட் தேர்வை வைத்துக் கொண்டு சம உரிமை வழங்கப்படுவதாக கூறும் ஒன்றிய அரசு ஒவ்வொரு அரசு மருத்துவ கல்லூரியிலும் 15 சதவீத இடம் ஒன்றிய அரசிடம் வழங்க வேண்டும் என்று கூறி யுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்தியும் வருகிறது. இந்த 15 சதவீத இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, பிற்படுத்தப் பட்டவர்களுக்கோ இடமில்லை. இதனை எதிர்த்து முதலில் உச்சநீதிமன்றம் சென்று வழக்கு தொடர்ந்த ஒரே முதல்வர் பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் திராவிட இயக்கத்தின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் தான் என பேசினார்.

இப்பயிற்சி கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, அன்னியூர் சிவா, திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சார்புஅ ணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், இளைஞர் அணி பாக முகவர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில் ஒன்றிய செயலாளர் சுந்தர.ஜெயபால் நன்றி கூறினார்.